2009 பிப்ரவரி 26]

வ. எண்	கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
43	பள்ளிக் கல்வித் துறை	3,47,36	1	–
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	–	2,03,36	3,22,88
45	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	132,18,17	22,82,39	–
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	2,88,34	–	–
47	இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	1	–	–
48	போக்குவரத்துத் துறை	2	–	90,63,14
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	2,99,76	–	–
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	49,99,67	–	–
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	1,976,01,92	–	–
	பெருமொத்தம்	4,311,42,13	796,66,41	1,113,69,43

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பிரேமா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அவர் சொன்ன ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

2. அறிவிப்புகள்–தொடர்ச்சி

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2008–2009, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008–2009 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [2009 பிப்ரவரி 26

கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the Financial Year 2008–2009."

9. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2008–2009, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2008-2009 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2008-2009 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 26-02-2009 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2008-2009 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.